Information and support

PARKINSON'S UK
CHANGE ATTITUDES.
FIND A CURE.
JOIN US.

# பார்க்கின்சன்’ஸ் நோய்க்கான ஒரு துரித அறிமுகம்

A quick introduction to Parkinson's – Tamil

## பார்க்கின்சன்’ஸ்-ஐ யாரும் தனியாக எதிர்கொள்ள வேண்டியிருக்காது

உங்களுககு இபபோதுதான் பார்க்கின்சன்’ஸ் நோயறியப்பபட்டிருந்தால், அல்லது அதனால் பாதிக்கப்பபட்டிருககும் யாரையாவது உங்களுககுத் தெரிந்திருந்தால், உங்களுககு ஏராளமான கேள்விகள் இருக்க வாய்ப்புணடு, மற்றும் சில கவலைகவும் இருக்கககூடும். இங்குதான் பார்க்கின்சன்’ஸ் UK-ஆல் உதவ உதவ முடியும்.

நாங்கள் UK-யின் பார்க்கின்சன்’ஸ் உதவி மறறும் ஆராய்ச்சி அறககொடை அமைபபு ஆவோம். பார்க்கின்சன்’ஸ்-ஆல் பாதிக்கப்படடுள்ள ஒவவொருவரு க்ரும் குணமடைவதற்கான தீர்வு ஒனன்றக் கண்டறிவதற்கும், அவர் வாழ்க்கையை மேம்படுததுவதறகுமான பொறுபபுறுதியைை நாங்கள் ஏறறுளளோம். எங்கள் வலைத்தளம், எங்கள் 365 உள்ளூர் குழுக்கள் மறறும் நிபுணததுவம் வாய்ந்த பணியாளர்களும், செவிலியரும் பணிபுரிகின்ற எங்கள் இலவச அந்தரங்க உதவிச்சேவை ஆகியவற்றின் மூலம் நாங்கள் ஏராளமான தகவல்களையும், உதவியையும் வழஙகுகிறோம்.

## பார்க்கின்சன்’ஸ் உள்ள ஒவவொரு நபரும் வித்தியாசமானவர்

ஒருவாககுள்ள பார்க்கின்சன்’ஸ் நோயறிகுறிகள் மறறும் எவ்வகளவு விரைவாக அந்நிலை உருவாகிறது என்பது ஒரு நபரிலிருநது மற்றவருக்கு வேறுபடும். தறபோது அதறகு குணமதேும் இல்லாவிட்டாலும், நோயறிகுறிகள் பலவற்றை சமாளிப்பதறகு ஏராளமான மருநதுகளும், சிகிச்சைகளும் உள்ளன.

மக்களுககு பார்க்கின்சன்’ஸ் ஏன் ஏற்படுகிறது என்பதை நாங்கள் இன்னமும் அறியவில்லை. இருந்தாமும், அது தொறறு நோயல்ல மறறும் அது வழக்கமாக குடும்பத்தில் பரம்பரையாகக் காணப்படுவதல்ல என்பதை நாங்கள் அறிவோம். பெரும்பாலானவர்களுக்கு, பார்க்கின்சன்’ஸ் காரணமாக அவர்களுடைய எதிர்பார்க்கபப்பும் ஆயட்காலம் அதிக அளவில் மாறுவதில்லை.

## அனைதது வயதுடையவர்களையும் பார்க்கின்சன்’ஸ் பாதிக்கிறது

UK-யில் துமார் 145,000 நபர்களுக்து பார்க்கின்சன்’ஸ் இருப்பதாக நாங்கள் கணிக்கிறோம். அது சுமாராக 350 நபர்களில் ஒரு வயதுவந்தவர் ஆகும்.

இந்நிலை உள்ள பெரும்பாலானவர்கள், 50 அல்லது அதறதும் அதிகமான வயதானவர்கள், ஆனால் குறைந்த வயதுடையவர்களுககு அது வரலாம்.

## வேலைகளைச் செய்வதறகு எனககு அதிக நேரம் எடுததுக் கொள்ளக்கூடும்

மனிதர்களின் மூளையில், டோபமைன் என்றழைக்கப்படும் ஒரு வேதிபபொருளை உற்பத்தி செய்கின்ற நரமபு செல்களில்

சில அழிநதுவிடுவதால் அந்நபர்களுககு பார்க்கின்சன்'ஸ் ஏற்படுகிறது. டோபமைன் இல்லாத நிலையாது, தங்கள் அசைவககளைக் கட்டுப்பபடுத்துவதில் அவர்களுககு மிகவும் சிரமம் இருக்கக்கூடும் என்பதைக் குறிக்கிறது. சில சமயஙகளில், அசைநது கொணடிருககுமபோதே அவர்கள் திடீரனெறு "உறைந்து"விடக்கூடும்.

பார்க்கின்சன்'ஸ், சிலருடய கைகள் மற்றும் உடல்களை குலுங்கச் செய்யவும் கூடும். இது, அன்றாடச் செயல்பாடுகளான உண்ணுதல், உடயைணிதல் அல்லது தொலைபேசியைப் பயன்படுததுதல் போன்றவற்றில் சிரமத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தலாம்.

## பார்க்கின்சன்'ஸ் அசைவுகளை மட்டும் பாதிப்பதில்லை

அசைவுகளில் உள்ள சிரமங்களுடன் சேர்தககு, களைபபு, வலி, மனசசோரவு, படபடபபு, நினைவாற்றல் பிரச்னைகள் மற்றும் மலச்சிக்கல் போன்ற மற்ற நோயறிகுறிகளையும் பார்க்கின்சன்'ஸ் உள்ளவர்கள் அனுபவிக்கக்கூடும்.

இவை பெரும்பாலும், தசை இயக்கம் சாரா நோயறிகுறிகள் என்று குறிப்பிடப்படுகின்றன மற்றும் அவை அந்நபர்களின் அன்றாட வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## எனது மருநது என்னை இயக்கிக் கொணடிருக்கிறது

நோயறிகுறிகளை சமாளிக்க உதவுவதறகு ஏராளமான மருநதுகள் கிடைக்கின்றன. உஙகளுககுச் சிறந்தவற்றைக் கண்டறிய உஙகள் சிறபபு மருததுவர் அல்லது பார்க்கின்சன்'ஸ் செவிலியர் உஙகளுககு உதவுவார். யாருக்காவது ஒரு மருநது உதவியிருந்தாலும், அது மற்றவர்களுககு வேலை செய்யாமல் போகலாம். சிலருககு மிக அதிக மருந்தளவுகள் அல்லது மருநதுகளின் கலவை ஒன்று தேவைப்படலாம், அதே சமயம் மற்றவர்கள் அதை சிறிய மருந்தளவுகளில், ஆனால் அடிக்கடி எடுத்துக் கொள்ள வேண டியிருக்கலாம்.

நாட்கள் செல்லச் செல்ல, அந்நபர்கள் தங்கள் மருந்தினை மாற்ற வேணடிய தேவை ஏற்படலாம். இயன்முறை மருததுவம் (ஃபிஸியோதெரபி) மற்றும் பேச்சு சிகிச்சையும் உதவக்கூடும். நோயறிகுறிகள் மருந்திறகுக் கட்டுப்படுவகு நின்றுவிடுகின்ற நபர்களுககு, அறுவை சிகிச்சை ஒரு தேர்வாக இருக்கலாம்.

## அது என்னை வெல்ல இயலாது

பார்க்கின்சன்'ஸ் எவ்வாறு ஒருவரை பாதிக்கிறது என்பது நாளுககு நாள், மற்றும் மணிககு மணிகூட மாறக்கூடும். ஒரு நாள் கவனிக்கப்படுகின்ற நோயறிகுறிகள், அடுத்த நாள் ஒரு பிரச்னையாகவே இல்லாமல் போகலாம்.

சில சமயஙகளில் பார்க்கின்சன்'ஸ்-ஐ சமாளிப்பது சிரமமாக இருக்கலாம் என்றாலும், இந்நிலை உள்ள பலரும் தொடர்நது சுறுசுறுப்பான, நிறைவான வாழ்க்கையை வாழ்கின்றனர்.

## நான் மேலும் எங்கே அறிந்து கொள்வது?

UK-யில் முதல் மொழி ஆங்கிலமாக இல்லாதவர்களுககு, 170-ககும் அதிகமான மொழிகள் அடங்கிய தொலைபேசி மொழிபெயர்பபுச் சேவை ஒன்றைப் பயன்படுத்தி, நாஙகள் ஆலோசனை வழஙகுகிறோம்.

**0808 800 0303** என்ற எண்ணில் நீஙகள் உதவிச்சேவையை நேரடியாக அழைதது, மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கோரலாம்.

உடல்நலப் பராமரிபபு நிபுணர்களும், உஙகள் ஒபபுதலுடன் எஙகளைத் தொடரபு கொணடு, உஙகளை அழைப்பதற்காக ஓர் உதவிச்சேவை ஆலோசகர் மற்றும் மொழிபெயர்ப்பாளருககு ஏற்பாடு செய்யலாம்.

எஙகள் தகவல்களின் அச்சிட்ட பிரதிகளுககு ஆர்டர் செய்ய, **parkinsons.org.uk/orderingresources**-ஐ அணுகவும் அல்லது **0300 123 3689**-ஐ அழைக்கவும்.

நாங்கள், சிறந்த பராமரிப்பு, சிகிச்சைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கு ஊக்கமளிக்கும் பார்க்கின்சன்’ஸ் அறக்கொடை அமைப்பாகும்.

## ஒன்றாக இணைந்து, பார்க்கின்சன்’ஸுக்கு யாரும் அச்சப்படாத நாளை நாம் கொண்டு வருவோம்.

Parkinson’s UK
215 Vauxhall Bridge Road
London SW1V 1EJ

இலவச இரகசிய உதவிச்சேவை எண் **0808 800 0303**
(திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை, சனிக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை). மொழிபெயர்பபு கிடைககும்.
NGT ரீலே **18001 0808 800 0303**
(ஸ்மார்ட் ஃபோன்கள், டாப்லெட்கள், பிசிக்கள் மறறும் இதர சாதனங்களில் பயன்படுததுவதறகாக).
மேலும் தகவல்களுககு, காணவும் **www.ngts.org.uk**

**hello@parkinsons.org.uk**
**parkinsons.org.uk**

Order code: PKL001T
கடைசியாக புதுப்பிக்கப்பட்டது ஜூலை 2019. ஐந்தாண்டுகளுக்குள் எங்கள் தகவல்களை நாங்கள் மறுஆய்வு செய்கிறோம். எங்கள் தகவல்கள் அனைத்தின் மிகவும் புதுப்பித்த பதிப்புகளுக்கு, தயவுசெய்து எங்கள் வலைத்தளத்தைக் காணவும்.

© பார்க்கின்சன்’ஸ் UK, ஜூலை 2019. பார்க்கின்சன்’ஸ் UK என்பது, யுனைடெட் கிங்டமின் பார்க்கின்சன்’ஸ் நோய் சங்கத்தினுடைய செயல்பாட்டுப் பெயராகும். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் (258197) மற்றும் ஸ்காட்லாந்தில் (SC037554) பதிவுபெற்றுள்ள ஓர் அறக்கொடை அமைப்பு.